www.Padasalai.Net www.CBSEtips.in

# ஆதிதிராவிடர் பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிறித்துவ ஆதிதிராவிடர் மாணாக்கர்களின் கல்வி உதவித்தொகை திட்டம் 2022-2023.

## கல்லூரிகளில் செயல்படுத்தப்படும் கல்வி உதவித்தொகை திட்டங்கள்

1. போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகை
2. உயர்கல்வி சிறப்பு உதவித்தொகை (HESS)

## பள்ளிகளில் செயல்படுத்தப்படும் கல்வி உதவித்தொகை திட்டங்கள்

1. பெண் கல்வி ஊக்குவிப்பு தொகை
2. சுகாதாரமற்ற தொழில்புரிவோர் குழந்தைகளுக்கான கல்வி உதவித்தொகை
3. ப்ரி மெட்ரிக் கல்வி உதவித்தொகை
4. போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகை

## பள்ளிகள்/ கல்லூரிகள் பொதுவாக கவனத்தில் கொள்ள வேண்டியவை

1. அரசு / அரசு உதவி பெறும் / சுயநிதி பள்ளி/கல்லூரிகளில் பயிலும் ஆதிதிராவிடர் பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிறித்துவ ஆதிதிராவிடர் மாணாக்கர்களுக்கு மேற்காணும் திட்டத்தின் மூலம் கல்வி உதவித்தொகை வழங்கப்படுகிறது.
2. மத்திய அரசின் மனிதவள மேம்பாட்டுத் துறையால் தங்கள் பள்ளி/கல்லூரிகளுக்கு வழங்கப்பட்டுள்ள AISHE (All India Survey Higher Education) and DISE Code (Unified District Information System for Education ) பெறப்பட்டு இருக்க வேண்டும் மற்றும் ஏற்கனவே பெற்றிருந்தால் பயன்பாட்டில் உள்ளதா என்பதை உறுதிபடுத்திக் கொள்ள வேண்டும். AISHE and DISE Code பெறப்படவில்லை எனில் AISHE இணையதள முகவரி (http.//aishe.gov.in) மூலமாக புதிதாக விண்ணப்பிக்க வேண்டும்.
3. கல்லூரிகளில் நடத்தப்படும் பாடப்பிரிவுகளுக்கு NBA (National Board of Accreditation)/NAAC (National Assessment and Accreditation Council) வழங்கப்பட்ட தரச்சான்றுக்கான ஆவணங்கள் பெற வேண்டும்.
4. ஒவ்வொரு பள்ளி/கல்லூரியும் தத்தமது பள்ளி/கல்லூரிகளில் பயிலும் ஆதிதிராவிட மாணாக்கர்கள் கல்வி உதவித்தொகை இணையதளத்தில் நேரடியாக விண்ணப்பிப்பது குறித்து உதவி செய்யும் பொருட்டு SC/ST Scholarship Help Desk ஒன்றை அமைத்து, அதற்கு சமூக பொறுப்பும், கணினி அறிவு நன்கு தெரிந்த தகுதியான அலுவலர்களை (ஆதிதிராவிடர் சமூகத்தை சேர்ந்தவராக இருப்பின் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் ) நியமித்தும், அவ்வலுவலருக்கு உதவியாளர்



Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593
Scanned by CamScanner

www.Padasalai.Net www.CBSEtips.in



ஒருவரை நியமித்தும், அவ்வலுவலர்கள் தொடர்பான விவரங்களை மாணாக்கர்கள் அனைவரும் அறியும் வண்ணம் பள்ளி/கல்லூரிகளின் தகவல் பலகையில் ஒட்டப்பட வேண்டும். அவ்வலுவலர்கள் மாணாக்கர்களது கல்வி உதவித்தொகை விண்ணப்பங்களை இணையதளத்தில் தவறின்றி பதிவிட (Error Free) அறிவுறுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

5. பள்ளிகள்/கல்லூரிகள் நடத்துவதற்கான தற்போதைய அங்கீகாரச் சான்று மற்றும் அரசாணையினை பயன்பாட்டில் வைத்திருக்க வேண்டும்.
6. பெண்கல்வி ஊக்குவிப்புத்தொகை மற்றும் சுகாதாரமற்ற தொழில்புரிவோரின் குழந்தைகளுக்கான கல்வி உதவித்தொகை திட்டத்தில் பயன்பெறும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணாக்கருக்கான பெற்றோர் ஆண்டு வருமான உச்ச வரம்பு இல்லை. ப்ரிமெட்ரிக் மற்றும் போஸ்மெட்ரிக் கல்வி உதவித்தொகை திட்டத்தில் பயன்பெறும் மாணாக்கர்களுக்கு வருமான உச்ச வரம்பு ரூ.2,50,000/-
7. 2022-2023-ஆம் கல்வியாண்டு IFHRMS மூலம் மாணவியர்களின் வங்கி கணக்கில் நேரடியாக கல்வி உதவித்தொகை வரவு வைக்கப்படும் என்பதால், மாணவியர்களின் பெயரிலான வங்கி கணக்கு இருத்தல் அவசியம்.
8. IFHRMS மூலம் கல்வி உதவித்தொகை வழங்குவதால் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் இருத்தல் அவசியம்.
9. பிப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில், மின்னணு தீர்வை மூலமாக கல்வி உதவித்தொகையினை வரவு வைக்க ஏதுவாக, வங்கி கணக்கில் குறைந்தபட்சம் ஒருமுறையாவது பணப்பரிவர்த்தனை மேற்கொண்டு வங்கி கணக்கு செயல்பாட்டில் (Operative) உள்ளதை உறுதி செய்ய வேண்டும்.
10. பள்ளிகளில் பின்பற்றப்படும் EMIS விவரப்படி SC/SCC/ST மாணாக்கர்களின் எண்ணிக்கை முழுவதுாக (100%) கல்வி உதவித்தொகை கேட்புப் பட்டியல் சமர்ப்பித்தல் வேண்டும்.

<u>பெண் கல்வி ஊக்குவிப்புத் தொலகை மற்றும் சுகாதாரமற்ற தொழில்புரிவோரின் குழந்தைகளுக்கான கல்வி உதவித்தொகை திட்டம் - பொதுவாக கடைபிடிக்க வேண்டிய வழிமுறைகள்.</u>

1. மாணாக்கர்களுக்கு ஏதேனும் ஒரு கல்வி உதவித்தொகை திட்டத்தின் (**Pre-Matric Or Unclean Or Girls Incentive Scheme**) கீழ் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும்.



Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593
Scanned by CamScanner

www.Padasalai.Net www.CBSEtips.in

2. பெண் கல்வி உதவித் தொகை திட்டத்தில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் மட்டும் 3 முதல் 8-ஆம் வகுப்பு வரை கல்வி பயிலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவியர்களுக்கு முறையே, 3 முதல் 5-ஆம் வகுப்பு வரை ரூ.500/-ம், 6-ஆம் வகுப்பு ரூ.1,000/-ம், 7 மற்றும் 8-ஆம் வகுப்பு பயிலும் மாணவியர்களுக்கு ரூ.1,500/-ம் இத்திட்டத்தின் மூலம் வழங்கப்படுகிறது. மாணவியர்களின் விண்ணப்பங்கள் சாதிச்சான்றுடன் கூடிய விண்ணப்பங்களுடன் வங்கி கணக்குப் புத்தகத்தின் நகல் இணைந்து சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

3. சுகாதாரமற்ற தொழில்புரிவோரின் குழந்தைகளுக்கு அரசு / அரசு உதவி பெறும் / சுயநிதிப் பள்ளிகளில் 1 முதல் 10-ஆம் வகுப்பு வரை கல்வி பயிலும் மாணாக்கர்களுக்கு (Any Religion & Any Community) தலா ரூ.3,000/- இத்திட்டத்தின் மூலம் வழங்கப்படுகிறது. பெற்றோர்கள் பணிபுரியும் பகுதியிலுள்ள கிராம நிர்வாக அலுவலர் / சுகாதார ஆய்வாளர் (Sanitary Inspector) அவர்களால் விண்ணப்பங்கள் பரிந்துரை செய்யப்பட வேண்டும். மாணாக்கர்களின் விண்ணப்பங்களுடன் வங்கி கணக்குப் புத்தகத்தின் நகல் இணைந்து சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

4. விண்ணப்பங்களை மாவட்ட கல்வி அலுவலர்கள் மற்றும் வட்டார கல்வி அலுவலர்கள் முறையாக ஆய்வு செய்து மாணாக்கர்களின் சரியான வங்கி கணக்கு எண் பதிவு செய்யப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்து ஆதிதிராவிடர் இன மாணாக்கர்களின் விண்ணப்பங்களை தனியாகவும், பழங்குடியின மாணாக்கர்களின் விண்ணப்பங்களை தனியாகவும் வன்நகல் மற்றும் மென்நகலாக (MS-Excel Sheet) கொடுக்கப்பட்டுள்ள படிவத்தில் முழுமையாக பூர்த்தி செய்து 30.11.2022-க்குள் விண்ணப்பங்களை மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

## Pre matric & Post matric கல்வி உதவித்தொகை திட்டம்

1. அரசு / அரசு உதவி பெறும் / சுயநிதிப் பள்ளிகளில் 9 மற்றும் 10-ஆம் வகுப்பு பயிலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணாக்கர்களுக்கு Pre matric திட்டத்தின் மூலமாகவும், 11 மற்றும் 12-ஆம் வகுப்பு மற்றும் கல்லூரிகளில் பயிலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணாக்கர்களுக்கு Post matric திட்டத்தின் மூலமாகவும் கல்வி உதவித்தொகை வழங்கப்படுகிறது.
2. மாணாக்கர்களின் விண்ணப்பங்களுடன் சாதிச்சான்று, வருமானச் சான்று, ஆதார், வருகைச் சான்று மற்றும் வங்கி கணக்குப் புத்தகத்தின் நகல்கள் இணைத்து சமர்ப்பிக்கப்பட வேண்டும்.



Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593
Scanned by CamScanner

www.Padasalai.Net www.CBSEtips.in

3. போஸ்மெட்ரிக் கல்வி உதவித்தொகை திட்டத்தில் மாணாக்கரின் பெயர் கல்வி சான்றிதழ்களில் (10ஆம் மற்றும் 12 ஆம் வகுப்பு) உள்ளவாறு ஆதாரில் இடம்பெற்றுள்ளதை உறுதி செய்ய வேண்டும். அவ்வாறு இல்லையெனில், பள்ளி சான்றிதழ்களில் இடம்பெற்றுள்ளவாறு மாணாக்கரின் பெயர் ஆதார் மற்றும் வங்கி கணக்கிலும் மாற்றம் செய்யப்பட வேண்டும். மொத்தமாக கல்வி சான்றிதழ், ஆதார், வங்கி கணக்கு புத்தகம் ஆகிய அனைத்திலும் ஒரே மாதிரியாக மாணாக்கரின் பெயர் இடம் பெற்றிருக்க வேண்டும்.
4. போஸ்ட்மெட்ரிக் கல்வி உதவித்தொகை திட்டத்தில் மாணவர் / பெற்றோரின் கைப்பேசி எண்ணிற்கு கடவுச்சொல் (OTP, One Time Password) வரப்பெறும் என்பதால் மாணவரின் / பெற்றோரின் கைப்பேசி எண் செயல்பாட்டில் உள்ளதை உறுதி செய்ய வேண்டும்.
5. புதுப்பித்தல் மாணாக்கர்களின் விண்ணப்பங்களை இணையதளம் மூலமாக பரிந்துரை செய்யும் பொழுது இக்கல்வியாண்டில் மாணவர்கள் 75%-க்கு குறையாமல் வருகை புரிந்துள்ளனரா என்பதை உறுதி செய்தும், இடைநிற்றல், மாற்றுச்சான்றிதழ் வழங்கியது, நீண்ட நாள் விடுப்பில் உள்ள மாணாக்கர்களை நீக்கம் செய்து விட்டு பிற மாணாக்கர்களின் விண்ணப்பங்களை பரிந்துரை செய்ய கேட்டுக் கொள்ளப்படுகிறது.
6. மேலும் புதுப்பித்தல் (Renewal) செய்யும் பொழுது ஒரு பள்ளி/ கல்லூரியிலிருந்து மற்றொரு பள்ளி/ கல்லூரிக்கு மாறுதலில் சென்ற மாணாக்கர்களின் விண்ணப்பங்களை இணையதளம் மூலமாக மாறுதலில் சென்ற பள்ளி/ கல்லூரிக்கு அவ்விண்ணப்பத்தினை பரிந்துரை செய்து மாற்றம் செய்திடல் வேண்டும். மாறாக, அவ்விண்ணப்பத்தினை இடைநிற்றல் (Discontinue) மாணவர் என குறிப்பிடும் நேர்வில் மாணவர் கல்வி பயிலும் பள்ளி/கல்லூரியில் மாணவருக்குரிய கல்வி உதவித்தொகை விண்ணப்பத்தினை பதிவேற்றம் செய்ய இயலாது என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.
7. மாணாக்கர்களின் வங்கி கணக்கு எண்ணை தவறுகள் இன்றி பதிவேற்றம் செய்ய கேட்டுக் கொள்ளப்படுகிறது. விண்ணப்பத்தினை சமர்ப்பித்த பின்னர் தவறுகள் கண்டறியப்படின் திருத்தம் செய்ய இயலாது என அறிவுறுத்தப்படுகிறது
8. 2022-2023-ஆம் கல்வி ஆண்டு முதல் புதிய /புதுப்பித்தல் விண்ணப்பங்களை நிர்ணயம் செய்யப்படும் கால கெடுவிற்குள் மட்டுமே இணையதளம் மூலம் பதிவேற்றம் செய்ய இயலும் என்பதால் தனிக்கவனம் செலுத்த தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.



Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593
Scanned by CamScanner

www.Padasalai.Net www.CBSEtips.in

9. நடப்புக் கல்வி ஆண்டின் ECS Return List அந்தந்த பள்ளி/ கல்லூரி முதல்வரின் Principal Log in -இல் வரப்பெற்றிருப்பின் அம்மாணவர்களின் சரியான வங்கி கணக்கு எண்ணினை நடப்பில் (Operative) கொண்டு வந்த பின்னர் மீள சமர்ப்பிக்க அறிவுறுத்தப்படுகிறது.

10. பதிவேற்றம் செய்த விண்ணப்பங்களை Print to dispatch copy பெயர் பட்டியலின்படி வரிசையாக அடுக்கி மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலகத்தில் ஒப்படைத்து சரிபார்த்த பின்னர் மீள பெற்றுக் கொள்ள தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. அவ்வாறு பெறப்பட்ட விண்ணப்பங்களை பள்ளி/ கல்லூரியிலேயே உரிய முறையில் பாதுகாத்து கல்வி உதவித்தொகை தொடர்பான ஆய்வுகள் மேற்கொள்ளப்படும் பொழுது அதை சமர்ப்பிக்க தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

**உயர்கல்வி சிறப்பு உதவித்தொகை திட்டம் (HESS)**

2022-2023-ஆம் கல்வியாண்டு முதல் அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகளின் விடுதிகளில் தங்கி கல்வி பயிலும் மாணாக்கர்களுக்கு கலை மற்றும் அறிவியல் பிரிவு மாணாக்கர்களுக்கு ரூ. 7,500/- ம், பொறியியல் பிரிவு மாணாக்கர்களுக்கு ரூ.8,000/- ம் வழங்கப்படுகிறது.

1. இத்திட்டத்தின் கீழ் கல்வி உதவித்தொகை பெறும் மாணாக்கர்கள் கல்லூரி விடுதிகளில் தங்கி கல்வி பயில வேண்டும்.
2. அரசு அனுமதி பெற்ற தனியார் விடுதிகளில் தங்கி கல்வி பயிலும் மாணாக்கர்களாக இருப்பின் சம்மந்தப்பட்ட கல்லூரி முதல்வர் பரிந்துரை செய்த பின்னர் அம்மாணாக்கர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்கப்படும்.
3. பெற்றோரின் குடும்ப ஆண்டு வருமான உச்ச வரம்பு ரூ.2,50,000/- க்கு மிகாமல் இருக்க வேண்டும்.
4. விண்ணப்பங்களை கல்லூரி முதல்வர்கள் முறையாக ஆய்வு செய்து மாணாக்கர்களின் சரியான வங்கி கணக்கு எண் பதிவு செய்யபட்டுள்ளதா என்பதை உறுதி செய்து ஆதிதிராவிடர் இன மாணாக்கர்களின் விண்ணப்பங்களை தனியாகவும், பழங்குடியின மாணாக்கர்களின் விண்ணப்பங்களை தனியாகவும் வன்நகல் மற்றும் மென்நகலாக (MS-Excel Sheet) கொடுக்கப்பட்டுள்ள படிவத்தில் முழுமையாக பூர்த்தி செய்து மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலகத்தில் சமர்ப்பித்தல் வேண்டும்.

Scanned by CamScanner
Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593